செ.வெ.எண்: 4 நாள் : 14.3.2023

## *மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ்குமார் அவர்கள்*

## *மாநகராட்சி துவக்கப் பள்ளியில் ஆய்வு*

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணவ, மாணவியர்கள் தங்கு தடையின்றி கல்வி பயில தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் வழங்கப்பட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, மாநகராட்சி பள்ளிகளில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதிய கழிவறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ்குமார் அவர்கள் மாநகராட்சி பள்ளிகளின் அடிப்படை வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள், சுகாதாரம் போன்றவை முறையாக பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுவதை உறுதியளிக்கும் வகையில் ஆய்வு மேற்கொண்டு, வருகிறார்கள்.

தொடர்ந்து, இன்று (14.3.2023) மண்டலம்-4, வார்டு-29, ஓடக்காடு, K.N.P புரம் பகுதியில் உள்ள மாநகராட்சி துவக்கப் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பள்ளிக்கு தேவையான உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வில் துணை மேயர் திரு.ரா.பாலசுப்ரமணியம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் மாநகராட்சி.**

